செய்தித்தாள்-தினகரன் பக்கம்-15 நாள்:23.07.2018

திருவாரூர் மாவட்டத்தில் இருந்து

# ஆளுநர் விருது முகாமில் தேர்வான 444 சாரணர்களுக்கு சான்றிதழ்

## சிஇஓ வழங்கினார்



ஆளுநர் விருது முகாமில் தேர்வு பெற்ற சாரணியருக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

திருத்துறைப்பூண்டி, ஜூலை 23: திருவாரூர் மாவட்டத்தில் ஆளுநர் விருது முகாமில் தேர்வு செய்யப்பட்ட 444 சாரண, சாரணியர்களுக்கு சான்றிதழ்களை சிஇஓ மாரிமுத்து வழங்கினார்.

திருவாரூர் மாவட்ட சாரண, சாரணியர் இயக்கம் சார்பில் 2016 மற்றும் 2017ம் ஆண்டுகளில் நடைபெற்ற ஆளுநர் விருது முகாமில் தேர்வு பெற்ற 444 சாரண, சாரணியர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதற்கு மாவட்ட சாரண ஆணையரான மாவட்ட கல்வி அலுவலர் (பொ) மணிவண்ணன் தலைமை வகித்தார். மன்னார்குடி மாவட்ட கல்வி அலுவலர் விஜயா முன்னிலை வகித்தார். தலைமை ஆசிரியர் தங்கராசு வரவேற்றார்.

மாவட்ட முதன்மை சாரண ஆணையரும், முதன்மை கல்வி அலுவலருமான மாரிமுத்து சான்றிதழ்களை வழங்கி பேசும் போது, மாணவர்களிடம் தன்னம்பிக்கை, சிந்திக்கும் ஆற்றல், சகோதரத்துவம், படைப்பாற்றல் ஆகியவற்றை அதிகரிக்க வழிகாட்டுதலாக இருப்பது சாரணியம். எனவே அனைத்து மாணவ, மாணவிகளும் சாரண இயக்கத்தில் சேர்ந்து பயனடைய வேண்டும் என்றார்.

இந்த நிகழ்ச்சியில் சாரண இயக்க மாநில ஒருங்கிணைப்பாளர் இளையகுமார், மண்டல ஒருங்கிணைப்பாளர் செல்லதுரை உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு பேசினர். மாவட்ட செயலாளர் மீனாட்சி நன்றி கூறினார். இதற்கான ஏற்பாடுகளை இணை செயலாளர் சக்கரபாணி, பண்டக காப்பாளர் அறிவு, மாவட்ட சாரணிய அமைப்பு ஆணையர் கவிதா, சாரண ஆசிரியர்கள் கலைசெல்வன், அய்யம்பெருமாள், சீனிவாசன் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.